செ.வெ.எண்:6 நாள்:8.11.2021

## பத்திரிக்கை செய்தி

## வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பொதுமக்களுக்கான அறிவுரை

தென்கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் அதை ஒட்டிய இந்திய பெருங்கடலில் சராசரி கடல் மட்டத்திலிந்து 4.5 கி.மீ உயரம் வரை மேல்காற்று சுழற்சி உள்ளது. அதன் தாக்கத்தின்கீழ் தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் சுற்றுப்புறப்பகுதியில் நவம்பர் 09.11.2021-ல் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி புயலாக மாற வாய்ப்புள்ளது. இது அடுத்த 45 மணி நேரத்தில் வலுப்பெற்று தமிழக கடற்கரையை நோக்கி வர வாய்ப்புள்ளது. இதன் காரணமாக நவம்பர் 9 மற்றும் 10 தேதிகளில் தென்கிழக்கு வங்கக்கடலில் மணிக்கு 40 கி.மீ முதல் 60 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும். இதனால் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்பதால் மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் எனவும், கடலுக்கு சென்ற மீனவர்கள் 09.11.2021-க்குள் கரைக்கு திரும்பவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், தொடர் கனமழையின் காரணமாக பெரும்பாலான நீர்நிலைகள் நிரம்பியுள்ளதால் பொதுமக்கள் ஆற்றில் குளிக்க செல்வதை தவிர்க்க வேண்டும். தாழ்வான பகுதிகளிலும், நீர்நிலைகளின் இரு கரைகளிலும் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும். மழை/வெள்ள நீர் தேங்கும் இடங்களில் கால்நடைகளை கட்டி வைக்கக்கூடாது. வெள்ள பெருக்கு ஏற்படுவதற்கு முன்னர் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

ஒருவாரக்காலத்திற்கு தேவையுள்ள அத்தியாவசியப்பொருட்களான உணவு வகைகள், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, எரிவாயு உருளைகள், மண்ணெண்ணெய், பால் பவுடர், மின் விளக்குகள் மற்றும் உபரி பேட்டரிகள், சுகாதாரத்தை பேணி காக்க தேவையான மருத்துவப்பொருட்கள், முகக்கவசம் ஆகியவற்றை முன்னெச்சரிக்கையாக வைத்திருக்க வேண்டும்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள (Aadhar Card, Pan Card, Bank Passbook, ATM Card Bond Papers, & All Certificates) ஆகியவற்றை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் எனவும் மேற்கண்டுள்ள அறிவுரைகளை பேரிடர் காலங்களில் தவறாமல் பின்பற்றுமாறும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அவசர கால கட்டுப்பாட்டு அறை 24*7 இயங்கி வருகிறது. பொதுமக்கள் இயற்கை இடர்பாடுகள் குறித்தான புகார்களை இலவச தொலைபேசி எண் 04364-1077, 04364-222588 என்ற எண்ணிற்கு தகவல் தெரிவிக்கலாம்** என மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.